**செய்தி வெளியீடு எண்: 175** **நாள்: 09.03.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மத்திய நீர்வள அமைச்சகத்தால் இன்று (9.3.2018) புது டில்லியில் நடத்தப்பட்ட கூட்டத்தில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஆறு வார காலத்திற்குள் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைத்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசால் வலியுறுத்தப்பட்டது**

காவேரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில், இன்று (9.3.2018) புதுடில்லியில் மத்திய நீர்வள அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய நான்கு மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என தமிழ்நாடு அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேலும், காவேரி நடுவர் மன்றத்தின் ஆணைகளை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்டதாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவேரி தொழில் நுட்பக் குழுமத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**